+2 வணிகவியல் முதல் இடைப்பருவத்தேர்வு ஜீலை-26

1.(ஆ) டேலர்
2.(இ) வேலைப்பகிர்வு
3.(அ) முடிவெடுத்தல்
4.(ஈ) செயலூக்கமளித்தல்
5.(ஈ) குறியிலக்கு மேலாண்மை
6.(அ) நிதிகளை திரட்டுவதற்கு
7.(ஈ) பலமுறை
8.(ஆ) 1992
9.(அ) மேலே உள்ள அனைத்தும்
10 (அ) குறைந்த இலாபத் தன்மை

ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10

11. மேலாண்மை என்பது முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது – **ஹென்றி.ஃபோயல்**

12. திட்டமிடுதலுக்கு பயன்படுத்தப்படும் பாரம்பரிய பழமொழி என்ன?

செயல்படுவதற்கு முன் நீங்கள் சிந்தியுங்கள், ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள்

13. **விதிவிலக்கு மேலாண்மை** என்பது நெறிமுறையிலிருந்து விலகிப் போகும் நிகழ்வுகளை அடையாளம் காண்பதற்கும், கையாளவதற்கும் கவனம் செலுத்துகின்ற வணிக நிர்வாகத்தின் ஒரு பணியாகும்.

14. **உடனடிச் சந்தை:** ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும். தீர்வு உடனடியாக நடைபெறுகின்றது.

15. **OTCEI** பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும்

16. **தரகர்** பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடைநிலையாளர்களாக செயல்படுபவர் தரகர்கள் எனப்படுவார். இவர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை. இதற்காக கழிவு பெறுவார்.

17.நிறுவனத்தில் கொள்கைகளை உருவாக்குவது **நிர்வாகம்.**

ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15

18. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?

அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல
இணக்கம். சச்சரவின்மை
தனிமனிதத் தத்துவம் அல்ல ஒத்துழைப்பு
ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமுள்ள வளர்ச்சி

19. **பணியமர்த்தல்** பொருத்தமான நபர்களை தேர்வு செய்து, பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயலைக் குறிப்பதாகும். பணிக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது, தேவையான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது, சிறந்த நபர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது.

20. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகள்

சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்துதல்.
நோக்கத்தை மாற்ற அதிகாரத்துடன் இருப்பவர்களுடன் ஆலோசனை செய்கிறது,
நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

21. இரண்டாம் நிலைச் சந்தை பற்றி சிறு குறிப்பு வரைக.

ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

22. ஏட்டுக் கடன் தரகு முகமை:- விற்பனை மூலம் பெற வேண்டிய பெறுதல்களின் அடிப்படையாக நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடே ஏட்டுக்கடன். இவை கழிவுக்காக ஏட்டுக் கடன்களை வசூலிக்கும்.

துணிகர நிதி நிறுவனம்:- இது சாதாரண நிதியின் ஒரு பகுதி. இது புதிய திட்டம் அல்லது கண்டுபிடிப்புக்கான நிதி வழங்க உருவாக்கப்பட்டது. இது நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவுகிறது.

23. கருவூல இரசீதின் வகைகளை விவரி

91 நாட்கள் கருவூல ரசீதுகள் 4 சதவீத தள்ளுபடியில் வெளியிடுதல்,
182 நாட்கள் கருவூல ரசீதுகள் - ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடுதல்,
364 நாட்கள் கருவூல இரசீதுகள் - நிலையான தள்ளுபடி இல்லை.

24. நீ உன்னை ஒரு நிறுவனத்தின் மேலாளராகப் பாவித்துக் கொண்டால், ஆற்ற வேண்டிய பணிகள்:

திட்டமிடல் (Planning) – நிறுவனத்தின் இலக்குகளை நிர்ணயித்து, அவற்றை எவ்வாறு அடைவது என முன்கூட்டியே திட்டமிடுதல்.

அமைத்தல் (Organising) – பணிகளைப் பிரித்து, தேவையான மனிதவளம் மற்றும் வளங்களை ஒழுங்குபடுத்துதல்.

பணியாளர் தேர்வு (Staffing) – தகுதியான பணியாளர்களைத் தேர்வு செய்து, பயிற்சி அளித்தல்.

வழிநடத்தல் (Directing) – பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கி, ஊக்குவித்து, பணிகளைச் சிறப்பாகச் செய்ய வழிகாட்டுதல்.

ஒருங்கிணைத்தல் (Co-ordinating) – அனைத்து துறைகளின் பணிகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படச் செய்தல்.

அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15

25.அ. மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி

அறிவின் தொகுப்பு:- தற்போது மேலாண்மை உயர் தனிச்சிறப்பு வாய்ந்த மேலாண்மைக் கோட்பாடு மற்றும் தத்துவத்தை உருவாக்கியுள்ளது.

மேலாண்மைக் கருவிகள்:- கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பெருகி விரிவடைந்துள்ளது. **தனிப்பாடப் பிரிவுகள்:-** பல்வேறு பல்கலைக்கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப்பாடப் பிரிவாகப் அங்கீகரித்திருக்கின்றன.

சிறப்பீடுபாடு:- மேலாண்மை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் மேலாண்மை சிறப்புத் தொழிலாளர்களுக்கு சாதகமான அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மனப்பாங்கு தற்போது அதிகரித்து வருகின்றது.

நடத்தை விதி:- வாங்குவோர் ஜாக்கிரதை என்ற கோட்பாடு சந்தையில் நீண்டகாலம் நீடிக்காது. தற்போது வாங்குவோர் எச்சரிக்கை என்ற கோட்பாட்டிற்கு பதிலாக விற்பவர் ஜாக்கிரதை என்ற சந்தை நடைமுறைகளை தீர்மானிக்கிறது.

25.ஆ. பல்வேறு வகையான நிதிச்சந்தைகளை விவரிக்க நிதிச்சந்தைகள் நிதிகோருதல் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

வகை:- கடன் சந்தை :- கடன் கருவிகளை வணிகம் செய்வது (எகா) அரசு பத்திரங்கள்

சமநிலை பங்குச் சந்தை:- பங்குளை வணிகம் செய்வது (எகா) நிறும பங்குகள்

முதிர்வு:- பணச்சந்தை:- குறுகிய காலத்தில் முதிர்வு அடைவது (ஒரு ஆண்டுக்குள்) (எகா) கருவூலச்சீட்டு

மூலதனச் சந்தை:- நீண்ட காலத்தில் அடைவது (ஓராண்டுக்கு மேல்) (எகா) பங்குகள்

வெளியீட்டுக்காலம்:- முதல்நிலைச் சந்தை :- புதிய வெளியீடுகளுக்கான சந்தை

இரண்டாம் நிலைச் சந்தை:- ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை

வழங்கல்:- உடனடிச் சந்தை:- ஆவணமும், ரொக்கமும் உடனடியாக பெறுதல்.

எதிர்கால சந்தை:- ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.

அமைப்பு:- பரிமாற்றக வர்த்தகச் சந்தை:- ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட அமைப்பு (பங்கு மாற்றகம்)

உடனடி சந்தை:- வழக்கமான நடைமுறைகளை கொண்டது.

26.அ. மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகள்:

பத்திரங்களின் சந்தை:- பங்குகள் மற்றும் பத்திரங்கள் மட்டுமே விற்கும் சந்தை

விலை:- தேவை மற்றும் அளிப்பை பொறுத்து விலை தீர்மானிக்கப்படும்.

பங்கேற்பாளர்கள்:- தனிநபர், நிறுமங்கள், அரசு வங்கிகள், நிதி நிறுவனங்கள்.

இட அமைவு:- பங்கு மாற்றகம் போன்ற நன்கு தெரிந்த இடமாக இருத்தல் (பங்கு மாற்றகம்)

சொத்துக்களின் சந்தை:- நீண்ட கால நிதி சார்ந்த சொத்துக்களான சந்தை.

26.ஆ. மேலாண்மையின் பல்வேறு பணிகள்:

திட்டமிடல்:- முன் கூட்டியே முடிவெடுத்தல். வருங்கால தேவைகளை பூர்த்தி செய்ய மதிப்பிடுதல்.

ஒழுங்கமைத்தல்:- உறுப்பினர்களிடையே இணக்கமாக உறவை ஏற்படுத்துதல்.
பணியாளர்களுக்கு சரியான பணிகளை வழங்குதல் மற்றும் பொறுப்பு ஏற்றல்.

பணி அமர்த்துதல்:- பணிக்கேற்ப பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்.
குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளித்தல்.
பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீட்டு ஊக்கம் அளித்தல். (பணப்பலன், பதவி உயர்வு)

இயக்குவித்தல் இலக்குகளை அடைய தொடர்ச்சியாக வழிகாட்டுதல்
கூட்டம், கையேடுகளை, சுற்றறிக்கை போன்றவை மூலம் தகவல்களை அளித்தல்.

ஒருங்கிணைத்தல்:- பல்வேறு திறமையுள்ள நபர்களை இணைத்தல்.
அனைத்து செயல்பாடுகளையும் இணைத்தல்.

27.அ. பங்குச் சந்தை பணிகளை விவரி.

உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:- ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

பத்திரங்கள் மதிப்பீடு:- பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:- பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:- மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

மூலதன உருவாக்கம்:- ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது

27. ஆ. தன்மைகள்	பணச் சந்தை	மூலதனச் சந்தை
நிதியின் காலம்	ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை	ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை
வணிக ஆவணங்கள்	வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை	பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள்
பண மதிப்பு	ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்சமதிப்பு ரூ25 இலட்சம்	ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100
இடர் அளவு	கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு	கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு
ஒழுங்குபடுத்தும் அமைப்பு	மையவங்கி	மைய வங்கி மற்றும் செபி